சலுகையாக விருதுநகர் மாவட்டத்திற்கு, 4 ஆண்டுகளில், 4 கல்லூரிகளை வழங்கிய பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை வெற்றிகரமாக நடத்திக்காட்டிய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் தொலைநோக்கு சிந்தனையோடு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியும் தங்கள் தொகுதிக்கு வேண்டும் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அந்த வகையில், அது மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 376, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

376—

பகுதிநேர நியாய விலைக் கடை

***43765—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, பூசலாங்குடி ஊராட்சியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே; நான் வணங்குகிற தெய்வம், என்னை வாழவைக்கும் தெய்வம், எங்கள் குல தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

திருத்துறைப்பூண்டி தொகுதி, பூசலாங்குடி ஊராட்சி, பூசலாங்குடி பகுதியில் 232 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருவதால், அதே பகுதியில்

2015 செப்டம்பர் 29]

மேலும் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, பூசலாங்குடியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போதிய கார்டுகள் இல்லை என்று சொல்கிறார்கள். பூசலாங்குடியைச் சேர்ந்த அகரவயல், தூத்தடிமுளை ஆகிய இரண்டு கிராமங்களைச் சார்ந்த கிட்டத்தட்ட 150 கார்டுகள் இராயநல்லூர் நியாய விலைக் கடையில் இருக்கின்றன. கடந்த காலங்களில் அடப்பாற்றில் தட்டிப் பாலம் இருந்த காரணத்தினாலே, அந்த தூத்தடிமுளை, அகரவயல் ஆகிய கிராமங்களிலிருந்து பூசலாங்குடிக்கு வர முடியாத சூழ்நிலையில் மேற்படி கிராமங்களின் குடும்ப அட்டைகள் இராயநல்லூர் நியாய விலைக் கடையில் சேர்க்கப்பட்டன. அந்தக் கார்டுகளைப் பிரித்து, பூசலாங்குடியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்தங்கூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கம் நடத்தும் பூசலாங்குடி முழுநேர நியாய விலைக் கடையில், முன்னியூர் கிராமத்திலிருந்து 21 குடும்ப அட்டைகளும், புஞ்சையூர் கிராமத்திலிருந்து 103 அட்டைகளும், பூசலாங்குடி கிராமத்திலுள்ள 108 குடும்ப அட்டைகளும் சேர்த்து, 232 குடும்ப அட்டைகளுடன் முழுநேர அங்காடி செயல்பட்டு வருகிறது. இதுவே மிகவும் குறைந்த அளவு குடும்ப அட்டைகளுடன் செயல்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 232 குடும்ப அட்டைகளுடன் இயங்கிவரும் பூசலாங்குடி முழுநேர நியாய விலை அங்காடியிலிருந்து கார்டுகளைப் பிரித்து பகுதிநேர

அங்காடி அமைக்க இயலாது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் கிராமங்கள் பூசலாங்குடியிலிருந்து அரை கிலோ மீட்டர் சுற்றளவுக்குள்ளாகவே இருக்கின்றன. எனவே, விதிமுறைகளின்படி எந்த நிபந்தனைகளும் பூர்த்தியாகவில்லை என்பதனால், பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 377, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

377—

போக்குவரத்துப் பணிமனை

***3529—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

ஒரு பணிமனை அமைக்கப்பட வேண்டுமென்றால், குறைந்தது 50 பேருந்துகள் இருக்க வேண்டும். போச்சம்பள்ளியில் தற்போது 17 பேருந்துகள்தான் இருக்கின்றன. பயணிகளின் அடர்வு அதிகரிக்கும்பட்சத்தில், பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த முடியும். பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பணிமனை அமைப்பது பற்றி பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.